# University of Jaffna



## Sir Pon Ramanathan
## Memorial Lecture- 2021

titled

**“யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் – ஓர் புதிய பார்வை”**

*by*


**Professor P. Pushparatnam,**
Retired Senior Professor in History
University of Jaffna.


*on*

**Monday 1st March 2021 at 4.00 p.m**

**at**

**Kailasapathy Auditorium**
**University of Jaffna**

# சேர்.பொன்.இராமநாதன்

## நினைவுப் பேருரை - 2021

**“யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் – ஓர் புதிய பார்வை”**


பேருரை வழங்குபவர்

**Professor P. Pushparatnam,**

Retired Senior Professor in History

University of Jaffna.


**01.03.2021**



**சேர். பொன். இராமநாதன்**

# Sir Pon Ramanathan

## துணைவேந்தரின் ஆசிச் செய்தி

“கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சிலே வார்த்தெடுக்கப்பட வேண்டியபொருளன்று. கல்வியின் பொருளும் கல்வி முறைமையும் காலத்துக்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும் வழக்கங்களும் அடிக்கடி மறைந்து வேறு கருத்துக்களும் வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன. காலப் போக்கிலே இலங்கையின் வடபாகத்திலும் மேற்குப் பாகத்திலும் அங்கு வாழும் மக்களுடைய நன்மைக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகம் தேவைப்படும். அந்நிய கல்விமான்கள் வற்புறுத்திய விசயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படைகளாகக் கொள்ளாது வேறு விசயங் களையும் கல்விமுறைகளையும் அடிப்படைகளாகக் கொண்ட பல்கலைக் கழகங்களாக இவை தேவைப்படும். இப் பல்கலைக்கழகங்கள் எவ்வெவ் விடங்களில் அமைக்கப்படுகின்றனவோ அவ்வவ்விடங்களில் உள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டவையாக இருக்கவேண்டும்”. 1927களில் கூறப்பட்ட இந்த தீட்சண்யமான வார்த்தை களுக்குச் சொந்தக்காரரின் பரோபகாரத்தின் விளைவுகளாகவே எங்க ளுள் பலர் இன்று நிமிர்ந்து நிற்கின்றோம். ஆம், இந்த ஆழ்ந்த கருத்தி யல்கள் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் எனும் சிந்தனைகள் வலுப்பெற்ற காலப்பகுதியில் சேர்.பொன். இராமநாத னால் விதைக்கப்பட்டவையாகும். அவரது தெளிந்த சிந்தனையின், நீண்ட கனவின், பெருவிருப்பின் விதையாக முளைத்த எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் கல்விப் பாரம்பரியச் செழுமைக்கு தமது அறிவை முதலிட்ட பெரியவர்கள், தமது சொத்துக்களை முதலிட்ட பெரியவர்கள், தமது அந்தஸ்தை முதலிட்ட பெரியவர்கள் மத்தியில் இவையனைத்தையும் முதலிட்ட பெரியவராக திகழ்பவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். அவர் இலங்கையின் தேசியவீரராக கொண்டா டப்பட்ட சிங்கள தலைவர்களால் பல்லக்கில் வைத்து அவர்கள் தோளில் காவப்பட்ட ஒப்பற்ற தலைவராக விளங்கியவர். இன்று நாம் பல்துறை களைச் சார்ந்த ஏறக்குறைய 2600 பட்டதாரிகளை இலங்கைத் தேசத்தின் அபிவிருத்திக்காக சம்பிரதாய பூர்வமாக கையளித்த பட்டமளிப்பு விழா வொன்றை நிறைவு செய்தபின்னர் இந்த நினைவுப் பேருரையில் சந்தித் திருக்கின்றோம். நாம் நாட்டுக்காக வழங்கயிருக்கும் இப் பங்களிப்பு

மிகவுயர்வானது. இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனும் பெருவிருப்பைக் கொண்டிருந்த சேர். பொன். இராமநாதனின் கனவின் ஒரு பாகத்தை மெய்ப்பித்திருக்கின்றோம்.

இன்று மேன்மைதங்கிய இப் பெருந்தகையின் பெயரினால் **"யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள்- ஓர் புதிய பார்வை"** எனும் தலைப்பில் எமது பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் சிரேஸ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்களால் ஆற்றப்படும் இவ்வுரை காலக்கனதிமிக்கது. வரலாற்றுத் துறையிலும் குறிப்பாக தொல்லியல் பரப்பிலும் அடையாளம் கொள்ளத்தக்க புலமைப் பாரம்பரியம் எமது பல்கலைக்கழகத்துக்கு உண்டு. அப் பாரம்பரியத்தின் விழுதாக விருப்பவர் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள். அவர் **"கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"** எனும் வள்ளுவனின் வாய்மொழியை மெய்பித்த ஒரு புலமையாளர். தாண்டமுடியாத பலம் வாய்ந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலங்கைத் தமிழர்களின் பூர்விகத்தை மெய்ப்பிக்கும் பல அகழ்வாராய்ச்சிகளை இன்று வரை முன்னெடுக்கின்ற அவரது அறிவுச் செயற்பாட்டுப் பரப்புக்கு எமது சமூகம் என்றும் நன்றியுடையது. இன்று புலம்பெயர் வாழ் இளைய தமிழர்கள் மத்தியிலும் அவர்களது ஆணிவேர் குறித்த தெளிவையும் பற்றையும் விதைக்கவும் வளர்க்கவும் பல செயற்பாடுகளை யதார்த்த எல்லை களுக்குள் நின்று அறிவுப் பரப்பில் ஆற்றிவருகின்றார்.

பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள் மற்றும் அவை கொண்டுள்ள ஆதாரங்கள் இலங்கை வரலாற்றிலும் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் வரலாற்றிலும் தவிர்க்க முடியாத சான்றாதார வகிபாகங்களைக் கொண்டவை. பல்கலைக்கழக சேவையில் ஓய்வை அண்மித்துள்ள நாள்களில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் ஆற்றப்படும் இவ்வுரை வரலாற்றுப் பதிவுமிக்கது. அவரது வாழ்வு நீட்சி எமது தலைமுறையின் இருப்பின் நீட்சியாக அமையும். அவர் நீண்டகாலம் தேச ஆரோக்கியத்துடன் வாழவும் அவரது அறிவுப் பரவலாக்கப் பணிகளும் ஆய்வுப் பணிகளும் மேலும் மேன்மையுறவும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா,**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மதிப்பிற்குரிய வேந்தர் அவர்களே துணைவேந்தர் அவர்களே, கலைப் பீடாதிபதி அவர்களே, பதிவாளர் அவர்களே, பேரவை மூதவை உறுப்பினர்களே, பீடாதிபதிகளே, பேராசிரியர்களே, துறைத்தலைவர்களே, சக ஆசிரியர்களே, விருந்தினர்களே, மாணவர்களே ஏனைய நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம்.

எனது பேருரையைத் தொடங்க முன்னர் "சைவசித்தாந்த தத்துவஞானி" எனப் பாரத நாட்டவரால் அடையாளப்படுத்தப்பட்ட சேர் பொன் இராமநாதன் அவர்களின் பன்முகப்பட்ட ஆளுமையையும், அளப்பரிய சமூகப் பணிகளையும் இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்வதை எனது பேருரைக்குப் பொருத்தப்பாடாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சேர் பொன் இராமநாதன் (1851-1930) அவர்கள் அரசியல், சட்டம், சமயம், மொழி, கல்வி, கலை என்பவற்றிற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளால் இலங்கை வரலாற்றிலே அவர் தனிப்பெரும் தேசியத் தலைவர்களில் ஒருவராக வெளிக் கிளம்பினார். இவரின் சமகாலத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் மேலைநாட்டு நாகரிக மோகத்தால் சுதேச மக்களின் பாரம்பரிய மொழி, மதம், கலை, பண்பாடு என்பன மறைந்துவிடும் அல்லது மறக்கப்பட்டு விடும் என்ற அச்சநிலை காணப்பட்டது. இந்நிலையில் சுதேச மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளைப் பாதுகாக்க இந்தியாவில் பல இயக்கங்கள் தோன்றிப் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராகப் போராடிய போது யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாக்க அரும்பாடுபட்டார். நாவலரின் பின்னர் அப்பணிகளை முன்னெடுத்த தலைவர்களில் சேர் பொன். இராமநாதனுக்கு முக்கிய இடமுண்டு.

1851ஆம் ஆண்டு மானிப்பாயில் பிறந்த சேர். பொன் இராமநாதன் தன் குடும்பத்தினரைப் போல் இந்து சமயத்தை உயிர் மூச்சாகவும், வாழ்வியலின் அடிநாதமாகவும் கொண்டு ஒரு இல்லற ஞானியாக

வாழ்ந்தவர். இந்து சமயக் கருத்துக்களை உலக அளவில் எடுத்துச் சென்ற பெருமை இவருக்குண்டு. அவரின் ஆன்மீக ஈடுபாடு பற்றி அமெரிக்காவின் பிரபல்யமான வழக்கறிஞர் மைரோன் பெல்ஸ் அவர்கள் கூறும் போது "எனது வாழ்நாளில் சந்தித்தவர்களில் மிகவும் அற்புதமான ஆன்மீகத் துலங்கல் கொண்ட சிறந்த ஆசிரியர் சேர். பொன். இராம நாதன் அவர்கள்" எனக் குறிப்பிடுகின்றார். இதனால் அமெரிக்காவில் இவர் சென்ற இடமெல்லாம் பிரம்ம ஞானி என்றே அறிமுகம் செய்யப் பட்டார். இவர் இந்து மதத்தைத் தனது பிறப்புரிமையாகக் கொண்டிருந்த போதிலும் அம்மதத்தில் காணப்பட்ட சமரசப் போக்கிற்கு ஏற்ப ஏனைய மதங்களை மதிப்பதிலும், அவற்றிற்கு பணிசெய்வதிலும் ஆர்வம் காட்டிய ஒருவர் ஆவார். பிரித்தானியர் ஆட்சியால் நலிவுற்றிருந்த பௌத்த மதத்தை மேம்படுத்த பௌத்த பிரமஞான சங்கத்தின் பொருளாளராக இருந்து சங்கத்திற்கு மானியங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்ததுடன் போயா தின விடுமுறையை நடைமுறைக்குக் கொண்டு வரவும் காரணமாக இருந்தவர் ஆவார்.

கிறிஸ்தவ சமயத்தை நன்கு கற்ற இவர் புனித விவிலியத்திலுள்ள பரி. மத்தேயு சுவிசேசம், பரி. ஜோவான் சுவிசேசம் முதலியனவற்றிற்குத் தமது சமய ஞான நோக்கிலே விளக்கவுரைகளை அளித்துள்ளார். கிறிஸ்த வர்களின் கல்விப்பணியைப் போற்றிய சேர் பொன் இராமநாதன் அவர்கள் மதமாற்றம் செய்வதை வன்மையாகக் கண்டித்த ஒருவர். ஒவ்வொரு மனிதனுக்கும் பிறந்த நாடு, இனம், மதம் மொழி, சமூகம், குடும்பம் ஆகியன அவனின் பிறப்புரிமையாகக் கடவுளால் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றை மாற்றுவதற்கு எவருக்கும் உரிமையில்லை என்பதை வலியுறுத்தி வந்தவர்.

இலங்கைச் சட்டசபையில் தாய்மொழிக் கல்வியையும், இலவசக் கல்வி யையும் வலியுறுத்தி வந்த சேர். பொன் இராமநாதன் தமிழ் மொழி யினதும், தமிழர் பண்பாட்டினதும் பெருமைகளையும், சிறப்புக்களையும் தேசிய, சர்வதேசக் கருத்தரங்குகளில் எடுத்துரைத்த பெருமைக்குரியவர். கல்வி உலகியலை மட்டுமன்றி ஆன்மீகத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திய அவர் கல்வி கற்பதில் பால் வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாதென்பது அவரின் அவாவாக இருந்தது. இவற்றை இவர் ஏற்படுத்திய இரு கல்வி

நிலையங்களிலும் செயற்படுத்திக் காட்டினார்.

சேர். பொன் இராமநாதன் தமிழ்ச் சமூகத்திற்கு செய்த மிகப் பெரிய பணிகளில் அவர் அமைத்துக் கொடுத்த கல்லூரிகள் அவருக்கு அழியாப் புகழை ஏற்படுத்தியுள்ளது. அவர் இந்து பெண்களுக்கான கல்லூரியை அமைப்பதிலேயே முதலில் அதிக கவனம் செலுத்தினார். அன்றைய காலச் சூழலில் இந்துப் பெற்றோரில் ஒரு சிலர் தமது பெண் பிள்ளைகளை உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்க அனுமதித்திருந்தாலும் தீவிரமான இந்துப் பெற்றோர் தம்பிள்ளைகள் அப்பாடசாலையில் கல்வி கற்கவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதனால் இந்துப் பெண் பிள்ளைகளுக்கென கல்லூரி ஒன்றை அமைப்பதன் மூலம் சமூகம் மேனிலை அடையும் என நம்பினார். ஆண் ஒருவர் கல்வி கற்பதால் ஒருவன் மட்டும் தான் கற்கிறான். ஆனால் ஒரு பெண் கல்வி கற்பதால் ஒரு சமூகமே கல்வி கற்கிறது என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இவற்றைக் கருத்திற் கொண்டே உடுவில் மருதனா மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அமைக்கப்பட்டது. இதுவே இந்துப் பெண்களுக்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது கல்லூரியாகும். இக்கல்லூரி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கீரிமலையில் நடைபெற்ற இந்து வாலிபர் ஆண்டு மகாநாட்டில் மக்கள் பலரும் ஆண்களுக்கான கல்லூரியும் நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த போது அதையேற்று 1921 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண் பிள்ளைகளுக்காக பரமேஸ்வராக் கல்லூரியும் அமைக்கப்பட்டது. இவ் விரு கல்லூரிகளிலும் தமிழ் மொழி, இந்து மதம், கலை பண்பாடு முதலான பாடங்கள் கற்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் ஒரு இந்து மதச் சூழலில் மாணவர்கள் கற்க வேண்டும் என்பதற்காக இரு பெரும் ஆலயங்களும் அமைக்கப்பட்டன. இன்றும் இலங்கையில் உள்ள திராவிடக் கலைமரபில் கருங்கற்களால் கட்டப்பட்ட ஆலயங்களில் சிதைவடையாது, மாற்றத்திற்கு உட்படுத்தப்படாது சேர். பொன் இராம நாதன் காலத்து நிலையில் பாதுகாக்கப்பட்ட ஒரேயொரு இந்து ஆலயம் என்ற பெருமை இராமநாதன் மகளிர் கல்லூரியில் உள்ள ஆலயத்திற்கே உண்டு.

இலங்கையில் பௌத்த பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்கத் தோன்றிய கல்வி நிலையங்களான வித்தியோதய, வித்தியலங்கார பிரிவேனாக்களே

1959 களில் பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இக் காலத்திற்கு முன்னரே சேர்.பொன் இராமநாதனின் மருமகன் அமரர் நடேசன் அவர்கள் இராமநாதன் மகளிர் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் இணைத்து இந்துப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றை "இராமநாதன் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் நிறுவுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கையின் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகமாக உருவாகிப் பின்னர் பல்கலைக்கழகமாக உயர்த் தப்பட்டதன் மூலம் ஓரளவு நிறைவு பெற்றது. 1974 இல் இவ்வளாகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கௌரவ பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், கல்வியமைச்சர் பதியுதீ மகமத் மற்றும் தமிழ் அரசியல் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்தில் பல் கலைக்கழக வளாகம் ஒன்றை அமைத்ததன் மூலம் தமிழரின் மொழி, மதம், வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வுகளுக்கு புதுவழி பிறந்துள்ள தாகக் கூறிய கருத்துக்கள் அப்போது பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு இன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அவற்றின் ஒரு அடையாள மாகவே அண்மையில் எமது பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட இந்துக் கற்கை நெறிகளுக்கான தனிப் பீடத்தைப் பார்க்கின்றேன். இப் பீடம் பலரின் நீண்டகாலக் கனவு. அதற்காகப் பலரும் உழைத்தனர். அக் கனவு நனவாவதற்கு கடுமையாக உழைத்தவர்களில் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், இந்நாள் துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜாவுக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு உறுப்பினர் பேராசிரியர் இ. குமாரவடிவேலு ஆகியோருக்கு முக்கிய பங்குண்டு என்பதில் மாற்றுக் கருத்திருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய துணை வேந்தர் பேரசிரியர் ஸ்ரீ சற்குணராஜாவுடன் கடந்த நாற்பது ஆண்டு காலம் இப்பல்கலைகழகத்தின் ஒரு சாலை மாணவனாக, ஒரு சாலை ஆசிரியராக வாழ்ந்த அனுபவம் எனக்குண்டு. அவர் கணிதப் பேராசிரியர், கணித அறிஞர் என்ற கல்வி வட்டத்திற்கு அப்பால் ஆன்மீக ஈடுபாட்டில் அகலக்கால் பதித்து, தமிழர் சமூகத்தில் புதிய முகவரியைத் தேடிய பெருமைக்குரியவர். அவரின் காலத்தில் நினைவுப் பேருரை நிகழ்த்துவதை நான் மேலும் பெருமைக்குரியதாகப் பார்க்கின்றேன். அந்த வாய்ப்பை வழங்கிய துணைவேந்தருக்கும், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்குழு நிர்வாக அங்கத்தவர்களுக்கும் என் நன்றிகள்.


**சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**

## யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் – ஒரு புதிய பார்வை

உலக நாடுகள் பலவற்றின் வரலாறு பற்றிய ஆரம்பகால ஆய்வுகள் பெரும்பாலும் அந்நாடுகளில் நிலவிய வரலாற்று வாய்மொழிக் கதைகள், வட்டார வழக்கில் உள்ள மரபுவழிச் செய்திகள், ஐதீகங்கள், பாரம்பரிய சடங்குகள், நம்பிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அடியாகக் தோன்றி வளர்ந்த வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதில் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்ந்த தொல்லியல், மானிடவியல், வரலாற்று மொழியியல் முதலான ஆய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு. இது இலங்கைக்கும் பொருந்தும் என்பதை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வெளிவரும் புதிய வரலாற்று முடிவுகளும், அரச வரலாற்றுப் பாட நூல்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் கோடிட்டுக் காட்டுகின்றன. பௌத்த மதத்தின் பரவலைத் தொடர்ந்து தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு தோன்றி வளர்ந்த நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. இவ்வரலாற்று இலக்கியங்களில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அநுராதபுரத்திற்கு வடக்கே திருகோணமலை. வன்னி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரந்தியங்கள் பாளி மொழியில் நாகதீபம் என்ற பெயரால் தனித்து அடையாளப்படுத்திக் கூறப்படுவது சிறப்பாக நோக்கத்தக்கது. இப்பெயரே பழந்தமிழில் இலக்கி யங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என்பவற்றில் தமிழில் நாகநாடு எனக் குறிப்பிடப்படுகின்றது. இப்பெயர்களே பதின்மூன்றாம் நுற்றாண் டிலிருந்து வன்னி, வன்னிப்பற்று யாழ்ப்பாணபட்டினம் முதலான பெயர் கள் தோன்றும் வரை வடஇலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இப்பிரதேச தனித்துவம் பௌதீக அடிப்படையில் மட்டுமன்றி பண்பாட்டு அடிப்படையிலும் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பதை தொல்லியல், இலக்கிய மூலாதாரங்களும் உறுதி செய்வதாக உள்ளன.

பாளி இலக்கியங்களில் வடபிரதேசம் தனித்து அடையாளப்படுத்திக் கூறப்பட்ட போதிலும் அநுராதபுரம், பொலநறுவை இராசதானிகள் கால ஆட்சியாளர்கள் இவ்வரச தலைநகரங்களுக்கு தெற்கே மிகத் தொலை

விலுள்ள பிராந்தியத்தியங்களுடன் கொண்டிருந்த அரசியல், பொருளாதார, பண்பாட்டு உறவுகளை விரிவாகக் கூறும் இப்பாளி இலக்கியங்கள் இத்தலைநகரங்களுக்கு வடக்கே மிகக் கிட்டிடய தொலை விலுள்ள வட இலங்கையுடனான உறவுகள் பற்றி மிகக் குறைந்தளவு செய்திகளையே தருகின்றன. இதனால் பாளி இலக்கியங்களை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு எழுதப்பட்ட பெரும்பாலான இலங்கை பற்றிய வரலாற்று நூல்களில் கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட வடபிராந்தியத்தின் வரலாறானது புகைபடர்ந்ததாகவே காணப் படுகின்றது. இந்நிலையில் 1970களில் கந்தரோடையில் பென்சில் வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலா பேக்கிளையின் தலைமையில் மேற்கொண்ட விஞ்ஞான பூர்வமான தொல்லியல் அகழ்வாய்வும், 1980 காலப்பகுதியில் கலாநிதி இரகுபதி மேற்கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் பூர்வீக மக்கள் பற்றிய தொல்லியல் அகழ்வாய்வுகளும், மேலாய்வுகளும், அவரைத் தொடர்ந்து 1990 களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து வடஇலங்கையில் பூநகரி, சாட்டி, முள்ளியான், பெரியபுளியங்குளம், செட்டிக்குளம், கட்டுக்கரை, நாகபடுவான் முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களைப் போல் வடஇலங்கைக்கும் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. அந்த உண்மைகளை மேலும் உறுதிப்படுத்துவதில் 2010 தில் இருந்து யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த தொல்லியல் ஆய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு.



வட இலங்கையில் 327 ஆண்டு கள் ஐரோப்பியர் மேலாதிக்கம் நிலவியதன் அடையாளமாகக் காணப்படும் நினைவுச் சின்னங் களில் யாழ்ப்பாணக் கோட் டைக்கு தனித்துவமான வரலாற் றுச் சிறப்புண்டு. யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு தெற்கே கடல்

நீரேரியுடன் இணைந்துள்ள இக் கோட்டை இலங்கையில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய கோட்டையாகக் காணப்படுகின்றது. கி.பி 1621 அளவில் மண், கல்லைப் பயன்படுத்தி வட்ட வடிவில் போத்துக்கேயரால் இக் கோட்டை கட்டப்பட்டாலும் 139 ஆண்டுகள் (1658-1796) யாழ்ப் பாணத்தில் ஆட்சி புரிந்த ஒல்லாந்தரால் மீளக் கட்டப்பட்ட தோற்றத் துடனேயே தற்போதைய கோட்டை காணப்படுகின்றது. அக்கோட்டையில் சில மாற்றங்களை பிரித்தானியர் தமது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத் தியிருந்தாலும் அவை ஒல்லாந்தர் காலக் கோட்டையின் அடிப்படைத் தோற்றத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அதனால் தான் இக்கோட்டை ஒல்லாந்தர்காலக் கோட்டையென அழைக்கப்படுகின்றது.

போர்த்துக்கேயரால் நான்கு பக்கச் சுவர் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கோட்டையை ஒல்லாந்தர் நட்சத்திர வடிவில் ஐந்து பக்கச் சுவர்களைக் கொண்டதாக மாற்றியமைத்தனர். இந்த வடிவில் இலங்கையிலுள்ள ஒரேயொரு கோட்டை இதுவாகும்.62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் ஒவ்வொன்றும் கீழ்ப்பகுதி 40 அடி அகலமும், மேற்பகுதி 20 அடி அகலமும், 30 அடி உயரமும் கொண்டவையாகக் காணப்படுகின்றது. இக்கோட்டைமீது படையெடுத்து வரும் எதிரிகளை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் சுவரின் உயரம் மேலிருந்து கீழ்நோக்கிப் பதிந்து காணப்படுகின்றது. கோட்டையின் வெளிப்புறச் சுவர்களைச் சுற்றி 20 அடி அகலத்தில் ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. நான்கு பக்கமும் பாரிய பீரங்கித் தளங்களையும், பாதுகாப்பு அரண்களையும், காவற்கோபுரங்களையும், சுரங்கங்களையும், சுடுதளங்களையும் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி இரண்டு மைல் தொலைவில் 200 போர்த்துக்கேயப் படைவீரர்களும், உள்ளூர் படைவீரர்களும் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்ததாக போர்த்துக்கேய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 34 ஏக்கரில் அமைந்த கோட்டையின் உட்பகுதியில் நிர்வாக மையங்கள், படைவீரர்களின் இருப்பிடங்கள், ஆயுதக் களஞ்சிய அறைகள் (Tunnels), ஒல்லாந்தர் மீளக்கட்டிய கிறிஸ்தவ தேவாலயம், இந்துஆலயம், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஆளுநர் மாளிகை (Queen House), சிறைச்சாலைகள், பிற நிர்வாகக் கட்டிடங்கள் என்பன காணப்படுகின்றன.

ஒல்லாந்தர் ஆட்சியில் கொழும்பு, காலி முதலான இடங்களில் உள்ள கோட்டைகள் அந்தந்த மாவட்டங்களின் நிர்வாக மையமாகச் செயற்பட்ட போது யாழ்ப்பாணக் கோட்டை மட்டும் இராணுவ பாதுகாப்பு மையமா கவே செயற்பட்டு வந்துள்ளது.

இந்து சமுத்திர நாடுகளில் உள்ள கோட்டைகளில் யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமும், அழகும், சிறந்த தொழில்நுட்பத் திறனும், ஐரோப் பியர் காலக் கலை மரபும் கொண்ட கோட்டை என்ற சிறப்பிற்குரியது. 1984 இல் இலங்கையிலுள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டைகள் பற்றி ஆய்வு மேற்கொண்ட நெல்சன் என்பவர் சமகாலத்து சிறந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையை இங்கிலாந்திலுள்ள தலைசிறந்த கோட்டைகளுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறந்த வடிவமைப்புக் கொண்டதெனப் புகழ்ந்து கூறுகின்றார் (Nelson1984). இத்தகைய சிறப்புக்குரிய இக்கோட்டை இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், அதிலும் குறிப்பாக கடந்த மூன்று சகாப்த கால அனர்த்தத்தால் அதன் பொலிவையும், சிறப்பையும் இழந்து காணப்படுகின்றது. இக்கோட்டையை வெளியில் நின்று பார்ப்பவர் களுக்கு சுற்றிவர அமைந்துள்ள பெரிய அரண்கள் கோட்டை என்பதனைப் புலப்படுத்தினாலும் உள்ளே இருந்த கட்டிடங்கள் பெருமளவிற்கு அழிவடைந்து பல இடங்களில் கற்குவியலாகவே காட்சியளிக்கின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்களில் யாழ்ப்பாணக் கோட்டை கட்டிய வரலாறு விபரமாகக் கூறப்பட்டுள்ளது. அதில் கோட்டை கட்டுவதற்கு வேண்டிய கோறல் கற்கள் அயலில் உள்ள வேலணை, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு முதலான இடங்களில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் காங்கேசன்துறையி லிருந்து கோட்டை வரையில் உள்ளூர் மக்களை வரிசையாக நிற்கவைத்து காங்கேசன்துறையில் இருந்தும் கோட்டை கட்டுவதற்கான கற்கள் கொண்டுவரப்பட்டன. கோட்டையைச் சுற்றியுள்ள கடல்களில் இருந்து கோறல் கற்களைக் கொண்டுவந்த தோணிகள் ஒவ்வொன்றுக்கும் அக்காலத்தில் மூன்று பணம் கூலியாக வழங்கப்பட்டது. கடலில் இருந்து கற்களைச் சேகரித்து தோணியில் ஏற்றுவதற்கு அரைப்பணம் வழங்கப்

பட்டது. தோணிகளுக்கு பாதுகாப்பாகச் செல்லும் அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 13 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது. கோட்டையைக் கட்டுவதில் போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மாரும் பங்கு கொண்டனர். அவர்களுள் தலைமை மேசனுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பணமும், அவனுக்கு கீழே வேலை செய்யும் மேசனுக்கு நாள் ஒன்றுக்கு அரைப் பணமும், சிற்றாள்களாக வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கரண்டி சாமி அரிசியும், கோட்டை கட்டுவோரை மேற்பார்வை செய்யும் பண்டாரத்திற்கு மாதம் ஒன்றுக்கு 8 பணமும் சம்பளம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் கோட்டை கட்டுவதற்கு சுதை தயாரிக்கும் சுண்ணாம்புக் கால்வாய்கள் குடா நாட்டின் பல இடங்களில் உருவாக்கப்பட்டன. இங்கு சுண்ணக் கற்கள் பதமாக்கப்பட்டு பண்ணைக் கரைக்கு கொண்டு செல்லப்பட்டன. அவற்றோடு கலப்பதற்கான சர்க்கரை மூட்டைகள் இந்தியாவில் கோவாவில் இருந்து தருவிக்கப்பட்டன. இவற்றோடு கலப்பதற்கான களிமண் குளங்களிலிருந்து பெறப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் யாழ்ப்பாணக் கோட்டை முழுக்க முழுக்க கோறல் கற்களைக் கொண்டே கட்டப்பட்டதென்ற கருத்தை புலப்படுத்துகின்றன.




ஆனால் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும், அழிவடைந்து காணப்படும் கிறிஸ்தவ ஆலயப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட மேலாய்விலும் கோறல் கற்களுடன் பல அளவுகளிலும், பல வடிவங்களில் அமைந்த சுண்ணாம்பு மற்றும் கருங்கற்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அவதானிக்க கூடிய முக்கிய வேறுபாடு கோறல் கற்கள் குறிப்பிட்ட அளவுகளில் (10" X 6") வெட்டப்பட்டு பொழியப்பட்டு கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ள போது கருங்கற்களும், சுண்ணக் கற்களும்

வேறுபட்ட அளவுகளிலும், வடிவங்களிலும் ஒழுங்கற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அக் கற்களில் பெரும்பாலானவை ஏற்கனவே இந்து ஆலயங்களுக்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் என்பதற்கு அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், அலங்காரங்கள், கற்களின் வடிவ அமைப்புக்கள் சான்றாகக் காணப்படுகின்றன. இக் கற்கள் எங்கிருந்து பெறப்பட்டதென்பதற்கு போர்த்துக்கேய ஒல்லாந்த ஆவணங்களில் விபரமாகக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அவர்கள் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் பெரிதும், சிறிதுமாக இருந்த ஏறத்தாழ 500 ஆலயங்களும், பெரிய வசிப்பிடங்களும் இடிக்கப்பட்டு அவற்றிலிருந்த கற்கள் கோட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நல்லூர் இராசதானியை 1519 இல் வெற்றி கொண்ட போர்த்துக்கேயர் அங்கிருந்த ஆலயத்தை தமது பாசறையாகப் பயன்படுத்திவிட்டு பின்னர் அவ்வாலயத்தையும் இடித் தழித்து அக்கற்களைக் கோட்டை கட்டப் பயன்படுத்தியதாக போர்த்துக் கேய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இதனால் கோட்டையில் கோறல் கற்கள் கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்களின் கற்களின் முக்கியத்துவத்தை இக்கோட்டை கட்டிய வரலாற்று நிகழ்ச்சிகளின் பின்னணியில் நோக்கப்படுவது பொருத்தமானதாகும்.

இந்நிலையில் இலங்கை-நெதர்லாந்து அரசுகளின் நிதி உதவியுடன் மூன்று ஆண்டுகால திட்டத்தில் இக்கோட்டையை பழைய நிலைக்கு கொண்டு வரும் புனர்நிர்மாணப் பணியை தற்போது இலங்கை தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காகத் தொல்லியல் திணைக்கள அறிஞர்கள், யாழ்ப்பாண தொல்லியல் பட்டதாரி மாணவர்கள் பலதரப்பட்ட தொழில்நுட்பவியலாளர், தொழிலாளர்கள் என நூற்றுக்கணக்கான பணியாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் தமது ஆரம்ப புனர்நிர்மாணப் பணிகளாகக் கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மாதிரி அகழ் வாய்வுகளையும், இடியுண்ட கட்டிடப்பகுதிகளில் தொல்லியல் மேலாய் வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வுகளின் போது கிடைத்துவரும் தொல்லியல் ஆதாரங்கள் கோட்டையின் வரலாற்றுக்கு மட்டுமல்ல இப்பிரதேச பூர்வீக வரலாற்றுக்கும் புது வெளிச்சம் ஊட்டு பவையாக அமைந்துள்ளன.

## கோட்டைப் பிரதேசத்தின் தொல்லியல் ஆய்வுகள்

கோட்டைப் பிரதேசத்தில் இதுவரை நான்கு இடங்களில் மாதிரிக் குழி அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011 இல் கோட்டை வாசல்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின் போது போத்துக்கேய காலத்திற்கு முந்திய சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவ் ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு கோட்டை வாசல்




தொடங்கும் இடத்திற்கும் கடற்கரைப் பக்கமாக உள்ள வீதிக்கும் இடையில் தற்போதைய கிறிஸ்தவ ஆலயத்திற்கருகில் முதலாவது அகழ்வாய்வு நடாத்தப்பட்டது. இவ் இடத்தில் 10x6 அடி நீள அகலத்தில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழியில் ஏறத்தாழ 2.5 அடி ஆழம் வரை நடாத்தப்பட்ட அகழ்வின் போது மூன்று வேறுபட்ட கலாசார மண் அடுக்குகளை அடையாளம் காணமுடிந்தது. இக்கலாசார மண் அடுக்குகளில் பல்வேறு வடிவங்களில் அமைந்த பலதரப்பட்ட மட்பாண்ட ஓடுகள் கிடைத்தாலும் மூன்றாவது கலாசாரப் படையில் மனித எலும்புக் கூடுகளுடன் பெருமளவு சீன மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மட்பாண்டங்களின் காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதால் மூன்றாவது கலாசாரப் படையின் காலம் போத்துக்கேய யாழ்ப்பாணம் வருவதற்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது உறுதியாகத் தெரிகின்றது. ஆயினும் இவ்வாய்வுக் குழியில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை தொடர்ந்து அகழ்வாய்வு நடாத்தப்படாததால் அவ்வாய்வுக் குழியில் இருந்திருக்கக் கூடிய தொன்மையான ஆதாரங்களை வெளிக்கொண்டுவர முடியவில்லை.

இரண்டாவது அகழ்வாய்வு கோட்டையின் உட்பகுதியில் ஆயுதக் களஞ்சிய அறைக்கு முன்னால் நடாத்தப்பட்டது. தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா தலைமையில் நடாத்தப்பட்ட இவ்வகழ்வாய்வில் 6 x 6 அடி நீள அகலத்தில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை அகழ்வு நடாத்தப்பட்டது. இவ்வகழ்வாய்வின் முழுமையான பெறுபேறுகள் இதுவரை வெளியிடப் படாவிட்டாலும் இவ்வகழ்வாய்வுக்கு பொறுப்பாக இருந்த தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா பத்திரிகை களுக்கு வழங்கிய செய்திக் குறிப்பில் இவ்வகழ்வாய்வுக் குழியில் கிடைத்த தொடக்க கால ஆதாரங்கள் கி.பி 5ஆம் நூற்றாண்டை அதாவது போத்துக்கேய யாழ்ப்பாணம் வருவதற்கு 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.


மூன்றாவது அகழ்வாய்வு ஐரோப்பியப் படை வீரர்கள் தங்கியிருந்த கட்டிடத்திற்கு முன்னால் நடாத்தப்பட்டது. இவ்வகழ்வாய்வு முன்கூட்டியே திட்டமிடப்பட்டதல்ல. இவ்விடத்தில் பிற தேவைக்காக 6x6 அடி நீள அகலத்தில் 7 அடி ஆழம் வரை குழி ஒன்று வெட்டிய போது வெளிவந்த அரிய தொல்லியல் சின்னங்கள் பின்னர் அவ்விடத்தில் அகழ்வாய்வு செய்ய காரணமாக அமைந்தது. இக்குழியில் கலாசார மண் அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்டாலும் இவற்றிடையே காணப்பட்ட ஆதாரங்கள் பூர்வீக குடியிருப்புக்களைத் தொடர்ந்து உரோமர்,அரேபியர், சோழர், சீனர், யாழ்ப்பாண இரசதானி மற்றும் ஐரோப்பியர் காலத்திற்கு உரியவை என்பதை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

நான்காவது அகழ்வாய்வு இவ்வாய்வுக்குழிக்கு அருகே 2017ஆண்டின் பிற்பகுதியில் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல் திட்டத்தின் அனுசரணையுடன் பிரித்தானிய டர்காம் (Durham) பல்கலைக்கழகமும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பிரிவும் இணைந்து மேற் கொண்டிருந்தது. இவ்வகழ்வாய்வு சமகால தொல்லியல் அறிஞர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான பேராசிரியர் கொனிங்காம் வழிகாட்டலில் நடைபெற்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதன்போது நவீன தொழில் நுட்பக்கருவிகளைப் பயன்படுத்தி விஞ்ஞானபூர்வமாக அகழ்வு

மேற்கொள்ளப்பட்டதால் இங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்களின் காலம், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான கணிப் பீடுகள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வுக் குழியில் இயற்கை மண்படைவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஒன்பது வேறுபட்ட கலாசார மண் அடுக்குகள் அடையாளம் காணப் பட்டன. அவற்றுள் இயற்கை மண்ணோடு ஒட்டிய கலாசார மண் அடுக்கில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் (Black and RedWare) கி.மு.700க்கும் கி.பி.100 நூற்றாண்டுக்கும், நரைநிற மட்பாண்டங்கள் (Grey ware) கி.மு. 500க்கும் கி.பி.200க்கும் இடைப்பட்டதெனவும் கணிப்பிடப்பட்டுள்ளன. இக்காலக் கணிப்புகள் போத்துக்கேயர் வருகைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே கோட்டைப் பிரதேசம் முக்கிய குடியிருப்புகளைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளதை உறுதி செய்கின்றன.



மேலும் இவ்வகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு காலகட்டத்திற்குரிய தொல் பொருட் சின்னங்கள் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட கோட்டைப் பிரதேசத்தின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பல் வேறு காலத்தை சேர்ந்த பல நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள் கிடைத்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் போத்துக்கேயர் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தற்போதைய யாழ்ப்பாண நகரம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கால அடிப்படையில் உறுதிப்படுத்த உதவுகின்றன. பேராசிரியர் கொனிங்காம் அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டு கோட்டைப் பிரதேசத்துடன் கடல்சார் வாணிபத்தில் ஈடுபட்ட நாடுகளையும், அவற்றின் காலங்களையும் கணித்துள்ளார். அவற்றுள் இந்திய Northern Black Polished Ware(500 BC to 100BC), உரோமநாட்டு




Rouletted Ware(200 BC to 200AD), தமிழக Arikkamdu Type- 10 (200 BC to 200AD), Arikkamdu Type- 18(300 BC to 200AD), உரோம கிரேக்க நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்ட Omphalos Ware(200 BC to 100AD), உரோம நாட்டு Arretine Ware(100 BC to 100AD), Amphora(200 BC to 100AD), இந்திய Red Polished Ware(100 BC to 800AD), தமிழகத்திலும் இலங்கையிலும் பயன்பாட்டிலிருந்த White Slipped with Red Paint(600 AD to 1100AD), Appliqué Ware (1300 AD to 1400AD), ஈரான் ஈராக் நாடுகளுக்குரிய Sasanian Islamic Ware (200 BC to 700AD), Buff Ware(400 AD to 800AD), Lustre Ware (800 AD to 1000AD), Imitation Lustre Ware (800 AD to 1000AD), White Tin-Glazed Ware (800 AD to 1000AD), Lead- Glazed Ware(800 AD to 1000AD) மற்றும் சீன நாட்டுக்குரிய Changsa Painted Ware (800 AD to 900AD), Xing Ding White Wares (800 AD to 1000AD), Yue green Ware (800 AD to 1000AD), Coarse Stone Ware(700 AD to 1100AD), Green Splashed White Ware (800 AD to 1000AD), Chinese Porcelain (1400 AD to 1700AD) முதலான நாடுகளுக்குரிய மட்பாண்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மேற்கூறப்பட்ட அகழ்வாய்வைத் தவிர 1995 இற்கு முன்னர் கோட்டையை மையப்படுத்தி நடந்த போரில் பெரிதும் அழிவடைந்த கோட்டையின் உட்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் பெறு பேறுகள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். வெளித்தோற்றத்தில் காணப்படும் அரண்கள், பீரங்கித் தளங்கள் முழுமையாக கோட்டையின் அடையாளமாக இருப்பினும் கோட்டையின் உட்பகுதியில் 35 ஏக்கரில் அமைந்திருந்த கிறிஸ்தவ தேவாலயம், போர் வீரர்களுக்கு, நிர்வாக அதிகாரிகளுக்கு அமைக்கப்பட்ட கல்லறைகள், நினைவிடங்கள், இராணி மாளிகை, படை வீரர் தங்கியிருந்த இடங்கள், நிர்வாக அலுவலகங்கள், சிறைச்சாலைகள், ஆயுதக் களஞ்சியங்கள், பாதுகாப்பு அரண்கள் என்பன பெருமளவுக்கு அழிவடைந்த நிலையில் காணப்பட்டன. இந் நிலையில் 2010 இல் இருந்து இக்கோட்டை மீள் புனரமைப்பு செய்வ தற்காக புதையுண்டிருந்த கட்டிட அழிபாடுகள் அகற்றப்பட்டு அவ் விடங்களில் களவாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வின் போது ஐரோப்பியர் கால கட்டிட எச்சங்கள், பலவகை மட் பாண்டங்கள், நாணயங்கள் என்பவற்றுடன் ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட கால உள்நாட்டு வெளிநாட்டு மட்பாண்டங்கள், பலவகை நாணயங்கள், சிலைகள், சிற்பங்கள், ஆலயங்களின் கட்டிட எச்சங்கள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ் ஆதாரங்கள் கோட்டை அமைந்துள்ள இடங்களிற்கு 2000 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.

### கோட்டைப் பிரதேசத்தின் பூர்வீக மக்கள்.

யாழ்ப்பாண நகரின் தொன்மையும் சிறப்பும் பற்றிய வரலாற்று ஆய்வில் அந்நியரான போர்த்துக்கேயர் கட்டிய கோட்டையுடன் முதன்மைப் படுத்திப் பார்க்கும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகின்றது. ஆனால் 2010 இல் இருந்து இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் ஆதாரங்கள் கோட்டை அமைந்த இடத்திற்கு தொன்மையான தொடர்ச்சியான நீண்ட பாரம்பரிய வரலாறு உண்டு என்பதும், அவ்வரலாற்றுப் பின்புலம் தான் இவ்விடத்தை கோட்டை கட்டுவதற்குப் பொருத்தமான இடமாக போர்த்துக்கேயர் தெரிவு செய்திருக்கலாம் என்பதும் தெரியவருகின்றது. கோட்டைக்கு மிக கிட்டிய

தொலைவில் கிழக்கே அரியாலை, பூம்புகார், தென்கிழக்கே மண்ணித் தலை, கல்முனை, தெற்கே சாட்டி, மேற்கே ஆனைக்கோட்டை முதலான இடங்களில் யாழ்ப்பாணத்தின் தொடக்க கால மக்களான பெருங்கற்கால அல்லது ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுக்குரிய மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதனால் அப்பண்பாட்டுக்குரிய மக்கள் கோட்டை அமைந்துள்ள பிரதேசத்திலும் வாழ்ந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. கந்தரோடையில் 1970களில் இப் பண்பாடு பற்றி ஆய்வு நடாத்திய அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்கிலே கந்தரோடைப் பண்பாடு தமிழகப் பெருங் கற்காலப் பண்பாட்டுடன் கொண்டுள்ள நெருங்கிய ஒற்றுமையைச் சுட்டிக் காட்டி கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்திருக்கலாம் அல்லது கந்த ரோடையில் வாழ்ந்த மக்கள் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கலாம் எனக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கோட்டைக்குள் ஐரோப்பியர் பயன்படுத்திய இருப்பிடங்களுக்கு முன் னால் நடாத்தப்பட்ட அகழ்வாய்வில் ஏறத்தாழ கி.பி1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோம மட்கலன்களைத் தொடர்ந்து அதன் கீழ் உள்ள கலாசாரப் படை கோட்டைப் பிரதேசத்தில் வாழ்ந்த தொடக்க கால குடியி ருப்புகளுக்கு உரியதாகக் காணப்படுகின்றது. ஆயினும் இவ் அகழ் வாய்வின் போது பெருமளவு உரோம மட்கலன்களைக் கண்டுபிடித்த போதும் அதன் கீழ் அமைந்த கலாசாரப் படையை ஆய்வு செய்வதற்கு ஆய்வுக் குழிக்குள் கடல் நீர் உட்புகுந்தமை பெரும் தடையாகக் காணப்பட்டது. ஆயினும் இக் கலாசாரப் படையில் இருந்தும், உரோம மட்கலன்களுடன் கலந்த நிலையிலும் பலவகை மட்கலன்களைக் கண்டறிய முடிந்தது. அவற்றுள் சில பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய கறுப்புசிவப்பு நிற மட்பாண்ட ஓடுகளாகும். அம் மட்பாண்ட ஓடுகளின் மென்மைத் தன்மை பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகளை விடக் குறைவடைந்து காணப்படுகின்றது. ஆயினும் இதன் மேற்படையிலுள்ள உரோம மட்கலன்களின் (Raulatted Wares) காலம் கி.பி 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததால் அதற்கு முற்பட்ட குடியிருப்புக்களுக்குரிய கலாசார காலம் கி.மு 3ஆம் அல்லது கி.மு 2ஆம் நூற்றாண்டைச்

சேர்ந்ததாக எடுத்துக்கொள்ள இடமுண்டு. **ஆயினும் பேராசிரியர் கனிங்காம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கோட்டை அகழ் வாய்வில் கண்டுபிடித்த கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டத்தின் காலம் கி.மு 700 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னரே கோட்டைப் பிர தேசத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.**



இக்குடியிருப்புக்கள் தொடர்ந்தும் இங்கு நிலைத்திருந்ததை இப்பிராந்தியத்தில் கிடைத்த சற்றுப் பிற்பட்ட காலத் தொல் லியல் ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் இங்கு கிடைத்த நாட்டுப்புற தெய்வங்களுக்குரிய சுடுமண் சிற்பம் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இச்சிற்பம் கோட்டையின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள (Site-08) கோட்டை அரணின் (Rampart) அத்திவாரத்தின் கீழ் நிலமட்டத் திலிருந்து 4.5 அடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். முற்றாக அழிவடைந்த இவ்வரணின் அத்திவாரம் இயந்திரத்தின் உதவியோடு தோண்டியெடுக்கப்பட்டதனால் அதன் கீழ் அமைந்திருந்த கலாசார அடுக்குகள் குழம்பிய நிலையில் காணப்பட்டன. ஆயினும் இச்சிற்பத்துடன் பலவகை மட்பாண்டங்களும், செங்கட்டிகளும் வெளி வந்ததனால் இக்கோட்டை அரண் கட்டப்படுவதற்கு முன்னர் அவ்விடத்தில் குடியிருப்பு அல்லது ஆலயம் இருந்திருக் கலாம் எனக் கருத இடமுண்டு. மண்ணோடு மண்ணாகக் காணப்பட்ட இச்சிற்பத்தின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்த இவ்விடத்தின் புனரமைப்புக்கு பொறுப்பாகவிருந்த ஆய்வு மேற்பார்வையாளர் திருமதி ராகினி இச்சிற்பத்தைச் சரிவர அடையாளம் கண்டு உரிய முறையில் துப்பரவு செய்து அதைத் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார். சுடுமண்ணால் அமைந்த இச்சிற்பம் 6.3 செ.மீ உயரமும் 6.6 செ.மீ அகலமும் 2.5 செ.மீ



சுற்றளவும் கொண்டது. இது அச்சினால் வடிவமைக்கப்பட்ட புடைப்புச் சிற்பம் என்பதை அதன் வடிவமைப்பும், அதன் உருவங்களும் உணர்த்துகின்றன. பெருமளவுக்கு வட்டவடிவில் அமைந்த இச்சுடுமண் தட்டின் ஒரு பக்கத்தில் மூன்று உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு பெண் உருவங்கள் என்பது தெளிவாகக் காணப்படுகின்றன. மூன்றாவது உருவம் ஆணுக்குரிய தெனப் பேராசிரியர் இரகுபதி கூறுகின்றார். இச்சிற்பத்தை ஒரு இடத்தில் வைத்து வழிபடுவதற்கு ஏற்ற வகையில் அதன் கீழ்ப்பகுதியில் தட்டையான பீடம் காணப்படுவதுடன் அதன் மேற்பகுதி திருவாசி போன்ற வடிவில் செதுக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் சிறிய முடியொன்றும் காணப்படுகின்றது.



தமிழகத்தில் கி.பி 7ஆம் நூற்றாண்டிலிருந்து ஆகம மரபில் கற்களைப் பயன்படுத்தி ஆலயங்கள், தெய்வச் சிலைகள், சிற்பங்கள் வடிவமைப்பதற்கு முன்னர் சுடுமண்ணால் செய்யப்பட்ட சிலைகள், சிற்பங்களை அக்கால மக்கள் வழிபட்டு வந்தனர். இதற்கு தமிழகத்தில் மாளிகைமேடு, அரிக்கமேடு, மாமல்லபுரம் முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கிடைத்த சுடுமண் சிற்பங்கள் சான்றாகும். இதற்குப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இம்மரபு சமகால இலங்கை இந்துக் கலை மரபிலும் பின்பற்றப்பட்டதற்கு பல ஆதாரங்கள் உண்டு. அண்மையில் வவுனியா மாவட்டத்தில் சாஸ்திரிகூழாம்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும் இது போன்ற சிற்பங்கள் கிடைத்துள்ளன. இதனால் யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த இச்சிற்பத்தை அக்காலத்தில் கோட்டைப் பகுதியில் வாழ்ந்த மக்களால் வழிபடப்பட்ட நாட்டுப்புறத் தெய்வங்களாகக் கருத இடமுண்டு.

இலங்கையில் புராதன குடியிருப்பு மையங்களில் காணப்பட்ட சான்றுகளுள் பெண் உருவம் பொறித்த நீள் சதுர நாணயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பல அளவுகளிலும், பல வடிவங்களிலும் அமைந்த இந்நாணயம் கி.மு 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வட இலங் கையின் புராதன குடியிருப்பு மையங்களில் இவ்வகை நாணயங்களே அதிக அளவில் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் இலங்கையில் வெளியிடப்பட்டதென்பதற்கு அந்நாணயங்களை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்கள் புராதன குடியிருப்பு மையங்களில் கிடைத்திருப்பது சான்றாகும். இந் நாணயங்களை இலங்கையின் குறுநில அரசர்கள், வணிக குழுக்கள் வெளியிட்டிருக்கலாம் என நம்பப்ப டுகின்றது. 1917 இல் கந்தரோடையில் களவாய்வினை மேற்கொண்ட போல் பீரிஸ் இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து அதில் உள்ள பெண் உருவம் தாமரை மலரில் நிற்பது போல் பொறிக்கப்பட்டுள்ளதை ஆதாரமாகக் காட்டி அதற்கு லக்சுமி நாணயம் என முதன் முதலாகப் பெயரிட்டுள்ளார். அவரால் இடப்பட்ட பெயரே இன்றுவரை பயன்படுத் தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் கிடைத் துள்ளன. இவ்வாதாரம் இங்கு புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கு மேலும் சான்றாகும்.

### கோட்டைப் பிரதேசமும் அயல்நாட்டுத் தொடர்புகளும்

யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் இணைந்துள்ள யாழ்ப்பாணக் கோட் டையின் அமைவிடம் தென்னிந்தியாவின் தென்பகுதியில் குறிப்பாக தமிழகத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. இலங்கை வரலாறு இந்தியப் பண்பாட்டுச் செல்வாக்கிற்குட்பட்டு வந்தாலும் அதன் ஆதிகால, இடைக்கால அரசியல் பொருளாதார பண்பாட்டு வரலாறு பெருமளவுக்கு தமிழகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்ததற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. அதில் இலங்கைத் தமிழக உறவின் குறுக்கு நிலமாக வட இலங்கை சிறப்பாக யாழ்ப்பாணம் காணப்படுவதனால் தமிழகத்தில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாக இப்பிராந்தியம் இருந்துள்ளது எனலாம்.

ஆதியில் யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள பிரதேசத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலுள்ள தீவுகள் ஓர் இணைப்பு பாலமாக இருப்பதனால் தமிழகச் செல்வாக்கு இப்பிராந்தியத்திலும் அவ்வப்போது ஏற்பட்டிருக்கும் எனக் கூறலாம்.

இலங்கையின் ஆதிகால வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் இலங் கையின் அயல்நாட்டு உறவுகள் வட இலங்கையிலுள்ள மாதோட்டப் பட்டினம், ஜம்புகோளப்பட்டினம் ஊடாக நடந்ததாகக் கூறுகின்றன. இலங்கையின் ஏனைய துறைமுகங்களைத் "தொட்ட" எனப் பாளி மொழியில் கூறும் போது இவ்விரு துறைமுகங்களையும் பட்டின எனக் கூறியிருப்பதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இந்த அயல் நாட்டு உறவில் குறிப்பாக வணிக உறவில் கோட்டையின் அமைவிடத்திற்கும் முக்கிய பங்குண்டு என்பது தெரியவருகின்றது. இதன் அமைவிடம் மேற்கே இந்திய உரோம, அரேபிய நாடுகளுடனும், கிழக்கே தென் கிழக்காசியா, கிழக்காசிய நாடுகளுடனும் நடைபெற்ற கடல் சார் வாணி பத்தில் முக்கிய பரிவர்த்தனை மையங்களில் ஒன்றாக இருந்துள்ளது. அதனையே கோட்டைப் பகுதியில் கிடைத்து வரும் தொல்லியல் ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

இலங்கையின் நிலையமும் இங்கு இயற்கையாகக் கிடைத்த வணிகப் பொருட்களும் பண்டுதொட்டு அயல்நாடுகளுடன் வணிகத் தொடர் புகளை ஏற்படுத்த காணரமாக அமைந்தது. ஆதியில் வட இலங்கையின் வணிகத் தொடர்புகள் பெருங்கற்கால பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதை மாந்தை, பூநகரி, கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்த சிலவகை மட்கலன்கள், கல்மணிகள், உலோகப் பொருட்கள் என்பன உறுதி செய்கின்றன. இவ்வர்த்தகத்தில் தென்னிந்தியா சிறப்பாகத் தமிழ் நாடு முக்கிய பங்கு வகித்தள்ளது. கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த விலை யுயர்ந்த மட்பாண்ட வகைகள் பெருங் கற்காலப் பண்பாடு காலத்தில் இருந்து தமிழகத்திற்கும் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத் திற்கும் இடையே வணிக உறவு இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. கி.பி 1ஆம் நூற்றாண்டுக்குரிய பெரிப்பிளஸ் எனும் நூலில் உரோம வணிகர்கள் இலங்கைக்கு வராமலே ஆரம்பத்தில் தென்னிந்திய துறைமுகங்களில்

இலங்கைப் பொருட்களைப் பெற்று திருப்தி அடைந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சகாப்தத்தில் உரோமப் பேரரசில் ஏற்பட்ட அமைதியும் உட்பலஸ் பருவக் காற்றின் உதவியைக் கண்டு பிடித்தமையும் உரோம அரசின் செல்வமும் அரசியல் அமைதியும் கீழைத்தேய வாசனைப் பொருட்களுக்கு மேற்கு நாடுகளில் மதிப்பை ஏற்படுத்தியது. அதனால் உரோம வர்த்தகர்களின் வருகை தமிழ் நாடு, ஆந்திரம், இலங்கை முதலான பிரதேசங்களில் அதிகரித்தது. உரோம ரோடு தமிழ்நாடு கொண்ட வர்த்தக உறவைப் பட்டினப்பாலையும், மதுரைக் காஞ்சியும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதை அரிக்கமேடு, உறையூர், கரூர், காவிரிப் பூம்பட்டினம், காஞ்சிபுரம் முதலான இடங்களிற் கிடைத்த உரோம நாட்டுத் தொல்லியல் சின்னங்களும் உறுதி செய்கின்றன. தொலமி, பிளினி ஆகிய மேற்கு நாட்டவரது குறிப்புகளிலும் இவ்வர்த்தக உறவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தொடக்க காலத்தில் தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஏலம், கறுவா, மிளகு போன்ற வாசனைப் பொருட்களையும் முத்து, இரத்தினம், யானை, யானைத்தந்தம் முதலான பொருட்களையும் பெற்று தென்னிந்தியத் துறைமுகங்கள் ஊடாக உரோமுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். அதேபோல் இலங்கைக்குத் தேவையான குதிரை, சில உணவுப் பொருட்கள், பல தரப்பட்ட மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மது வகைகள் என்பன தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. இந்நிலை கி.பி 1ஆம் நூற்றாண் டளவில் மாற்றமடைந்தது. உரோம நாட்டு வர்த்தகர்களே இலங்கையில் நேரடியாக வணிக நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ்வணிக நடவடிக்கை கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்திருந்ததை அனுராதபுரம், பொம்பரிப்பு, மாந்தை, திருகோணமலை, கந்தரோடை, பூநகரி, பொல நறுவை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாட்டுக்குரிய நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. சமகாலத்தில் இவ்வர்த்தகத் தொடர்பு யாழ்ப் பாணக் கோட்டைப் பிராந்தியத்திலும் ஏற்பட்டிருந்ததை அங்கு மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

கோட்டைப் பிரதேசத்தில் உரோமரின் வரத்தகத் தொடர்புகள் கி.பி 1ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டிருக்கலாம் என்பதனை இங்கு மிகச் செறிவாக கிடைத்த உரோம மட்கலன்கள் உறுதிப்படுத்துகின்றன. கொட்றிங்டன் 1924 வெளியிட்ட தனது நூலில் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் மட்குடம் ஒன்றில் சில பொன் நாணயங்களைக் கண்டுபிடித்ததாகக் குறிப் பிடப்பட்டுள்ளார். உரோமர் பொன் நாணயங்களைத் தொடர்ந்து வெளி யிட்ட செப்பு நாணங்கள் பெரும்பாலும் கி.பி 2ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதால் கோட்டைப் பிரதேசத்தில் கிடைத்த பொன் நாணயங்கள் இப்பகுதியில் உரோமருக்குள்ள தொடர்பு கி.பி 1ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

கோட்டையின் உட்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய் வில் உரோம மட்பாண்ட சிதைவுகள் அடையாளம் காணப்பட்டாலும் ஐரோப்பியரின் இருப்பிடங்களுக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த உரோம மட்பாண்டங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வுக் குழியில் ஐந்தாவது கலாசாரப் படையில் செறிவாகக் காணப்பட்ட மட்கலன்களில் சில அதற்கு முற்பட்ட குடியிருப்புக்களுக்குரிய மட்பாண்டங்களுடன் கலந்த நிலையிலும் காணப்பட்டன. இங்கு கிடைத்த மட்பாண்டங்களில் ரௌலட் மட் பாண்டங்கள் (Roulette Ware), அரிட்டைன் மட்கலன்கள் (Arretine Ware), ஆம்போராச் சாடி (amphorae Jar) என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. உரோம வர்த்தகத்தில் மதுபானம், எண்ணெய் போன்ற திரவப் பொருட்களைப் பாதுகாக்க ஒருவகைச் சாடி பயன்படுத்தப்பட்டது. இவை ஆம்போராச் சாடிகள் என அழைக்கப்பட்டது. இவை மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு பழுப்பு நிறத்தினை உடையனவாக விருக்கும். இவற்றின் அடிப்பகுதி கூராகவும், வாய்ப்பகுதி மூடியதாகவும், கழுத்துப் பகுதியின் இருபுறமும் கைப்பிடிகள் உடையதாகவும் காணப்படும். இதிலே கைபிடிகள் இருப்பதால் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் கூர்மையான அடிப்பகுதி இருப்பதால் நிலத்தில் ஊன்றி வைப்பதற்கும் வசதியாக இருந்தது. இவை தமிழ்நாட்டில் அரிக்கமேடு, வசவ சமுத்திரம், கரூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. கோட்டை அகழ்வாய்வில் இவ்வகைச் சாடிகள்

முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் சாடியின் உடைந்த பாகங்களும், அவற்றின் காற்பகுதிகள் சிலவும் கிடைத்துள்ளன. இவை உரோம நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டதால் இலங்கையில் உரோமரின் நேரடி வர்த்தகம் நடைபெற்ற இடங்களில் கோட்டைப் பகுதியும் ஒன்று எனக் கருத இடமுண்டு.

இலங்கைத் தொன்னிந்திய வர்த்தகத்தில் உரோமரின் செல்வாக்கு கி.பி 5ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படையாக வீழ்ச்சியடைய மேற்காசி யாவில் ஏற்பட்ட அராபியரின் வர்த்தக எழுச்சி இப்பிராந்தியங்கள் செல்வாக்குப் பெறக் காரணமாகியது. இவற்றை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்கள் வட இலங்கையில் மாந்தை, பூநகரி, கந்த ரோடை போன்ற இடங்களிலும் தமிழகத்தில் அரிக்கமேடு, மாளிகைமேடு போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இவ்வராபியரின் வர்த்தக எழுச்சியில் மாதோட்டம் முக்கிய துறைமுகமாக மாறியதை அங்கு கண்டு பிடிக்கப்பட்ட செறிவான மட்கலன்கள் உறுதி செய்கின்றன. சமகாலத்தில் அராபியரின் வர்த்தக நடவடிக்கைகள் கோட்டைப் பகுதியிலும் ஏற்பட்டி ருந்ததை அகழ்வாய்விலும், தொல்லியல் மேலாய்விலும் கிடைத்த சிலவகை மட்பாண்டங்கள் உறுதிசெய்கின்றன.

கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால இலங்கை வரலாற்றின் அயல்நாட்டு உறவுகளில் கோட்டைப் பிரதேசம் வட இலங்கையில் அதிக முக்கியத்தவத்தை பெற்றிருக்கலாம் என்பதனை இங்கு கிடைத்த நாணயங்கள், மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள் என்பன உறுதி செய்கின்றன. கோட்டையில் கிடைத்த அயல்நாட்டு நாணயங்களில் சோழ நாணயங்கள் எண்ணிக்கையில் அதிகமாகும். இங்கு சோழ நாணயங்களுடன் சோழரைத் தொடர்ந்து தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சேர, பாண்டிய நாணயங்களும் கண்டு பிடிக் கப்பட்டுள்ளன. இத்துடன் களவாய்விலும், அகழ்வாய்விலும் கிடைத்த சிலவகை மட்பாண்டங்கள் சோழர் கால மரபைச் சார்ந்தவையாக வுள்ளன. இம் மட்பாண்டங்கள் தமிழகத்தில் தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற இடங்களில் கிடைத்த சோழர்கால மட்பாண்டங்களை நினைவு படுத்துவதாக உள்ளன. 1970 களில் கோட்டைக்குள் கண்டு பிடிக்கப்பட்ட

கி.பி 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராஜேந்திர சோழனது கல்வெட்டு நல்லூரில் இருந்த ஆலயம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுகின்றது. இந்நல்லூர் தற்காலத்தில் யாழ்ப் பாணத்திலுள்ள நல்லூரைக் குறித்ததா அல்லது சோழர் காலத்தில் கோட்டைப் பகுதியில் ஒர் இடம் நல்லூர் என்ற பெயரில்இருந்ததைக் குறிப்பிடுகின்றதா என்பது தெரியவில்லை. பேராசிரியர் இநதிரபாலா மற்றும் பேராசிரியர் வி.சிவசாமி ஆகியோர் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்ட காலப்பகுதியில் கோட்டை அரணில் தெற்குப் பகுதியில் கி.பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரந்தக் கல்வெட்டு அவதானித்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாதாரங்களை நோக்கும் போது கோட்டைப் பிரதேசம் சோழரின் வணிக மையமாக மட்டுமன்றி அவர்களின் குடியிருப்பு மையமாகவும் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்று கின்றது. ஏனெனில் கி.பி 993 இல் இருந்து கி.பி 1070 வரை இலங்கையில் சோழரின் தலைநகராகப் பொலநறுவை இருந்த போது அவர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கு பெருமளவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்பட்டன. பேராசிரியர் க.இந்திரபாலா கி.பி 993 இல் முதலாம் இராஜராஜ சோழன் அனுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் அவர்களின் ஆதிக்க மையம் யாழ்ப்பாணத்தில் அல்லது திருகோணமலையில் இருந்துள்ளது எனக் கூறியுள்ளார். இககூற்றைக் கோட்டையில் கிடைத்து வரும் சோழர் கால ஆதாரங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமளிக்கின்றது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கி.பி 5அம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்ட வணிக கலாசார உறவுகள் பற்றிச் சீன இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றில் வட இலங்கையுடனான உறவுகள் பற்றிக் குறிப்புக்கள் தெளிவற்றதாக இருப்பினும் வட இலங்கை முக்கிய பங்கு வகித்ததை மாந்தை, பூநகரி, கந்தரோடை முதலான இடங்களில் கிடைத்த சீன நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் உறுதி செய்கின்றன. இவ்வணிக கலாசார உறவுகள் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் அல்லது இப்பிரதேசத்தினூடாகவும் நடைபெற்றிருக்கலாம் என்பதனை இங்கு கிடைத்து வரும் ஆதராரங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் அதிகளவானவை சீன மட்பாண்டங்களும், கண்ணாடிப்

பொருட்களும் கோட்டை அகழ்வாய்வில் மட்டுமன்றி களவாய்வின் போதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றிடையே கண்டுபிடிக்கப்பட்ட சீன நாணயங்களின் காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டுக்கும் 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகக் கணிப்பிடப்பட்டதனால் இக்காலப் பகுதியில் சீன நாட்டவர் கோட்டைப் பிரதேசத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் எனக் கூறலாம்.

சமகாலத்தில் பொலநறுவை அரசு வட இலங்கையில் உள்ள ஊர் காவற்றுறை துறைமுகம் ஊடாக தென்னிந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் அரசியல், பொருளாதார தொடர்புகளை ஏற்படுத்தியதாகப் பாளி இலக்கியமான சூளவம்சம் கூறுகின்றது. இது உண்மை யென்பதனை நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 12 ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டும் உறுதி செய்கின்றது. இக்கல்வெட்டு ஊர்காவற்றுறைமுக நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகள், வெளிநாட்டு வணிகருக்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும், அவர்களிடம் பெறவேண்டிய வரி முறைகளையும் குறிப்பிடுகின்றது. இந்நிலையில் கோட்டைப் பகுதியில் பொலநறுவை அரசு கால நாணயங்கள் பல கிடைத்திருப்பது பொல நறுவை அரசு கால வெளிநாட்டு வர்த்தகத்தில் கோட்டைப் பிரதேசமும் முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

**நகரமயமாக்கம்**

தென்னாசியாவில் நகரமயமாக்கத்தின் தோற்றமும், அதற்கான வர லாற்றுப் பின்னணியும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாகக் காணப் படுகிறது. பொதுவாக நிலையான குடியிருப்புகள், நிரந்தர பொருளா தாரக் கட்டமைப்பு, மிகை உற்பத்தி, சிறுதொழில்நுட்பவளர்ச்சி, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் என்பன நிகழ்ந்ததற்கான ஆதாரங்கள் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோன்றியதன் தொடக்க காலமாகக் கூறப்படுகின்றது. தமிழகத்தில் சேர நாட்டின் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன உரோம நாட்டு வணிகத் தொடர்பால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பாண்டி நாட்டிலும், சோழ நாட்டிலும் இவை விவசாய உற்பத்தியால் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. வடஇந்தியாவில் நகரமயமாக்கத்தின் தோற்ற காலம் கி.மு.500-400 எனக் கணிப்பிடப்பட்


டுள்ளது. தமிழகத்திலும் இலங்கையிலும் இதன் தோற்ற காலம் ஏறத்தாழ கி.மு.200 எனக் கூறப்படுகின்றது. இலங்கையில் புராதன நகரங்கள் தோன்றிய இடங்களாக அநுராதபுரம், மகாகமை, கந்தரோடை, மாதோட்டம் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு இவ் விடங்கள் பிற நாடுகளுடன் குறிப்பாக உரோம நாட்டுடன் கொண்டிருந்த கடல்சார் வணிபத் தொடர்புகள் முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொண்ட மேலாய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள், பலவகை மட்பாண்டங்கள் இப் பிரதேசம் தொடக்கத்தில் உள்நாட்டு வர்த்தகத்திலும் பின்னர் இந்தியாவுடனும் இவற்றைத் தொடர்ந்து உரோம அரேபிய, சீனா முதலான நாடுகளுடன் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டதை உறுதி செய்கின்றன. இவற்றை அகழ்வாய்வில் கிடைத்த ஆதாரங்கள் மேலும் உறுதி செய்கின்றன. இவ்விடத்தில் கொட்றிங்ரன் என்ற அறிஞர் கோட்டைப் பிரதேசத்தில் இருந்து 20 உரோம நாட்டு தங்க நாணயங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறியிருப்பதும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண நகர உருவாக்கம் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கந்தரோடை, அநுராதபுர, மகாகமை முதலான நகரங்கள் தோன்றியதன் சமகாலத்தில் ஏற்பட்டதெனக் கூறலாம்.

### கோட்டைக்குள் மறைந்து காணப்பட்ட ஆலயங்களின் அழிபாடுகள்

கோட்டை மீள் புனரமைப்பு பணிகளின் போது கிடைத்து வரும் வரலாற்றுப் பெறுமதி மிக்க ஆதாரங்களுள் 16 ஆம் நூற்றாண்டில் தற்போதைய கோட்டை கட்டப்படுவதற்கு முன்னர் வழிபாட்டிலிருந்த இந்து ஆலயங்களின் அழிபாடுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இக் கோட்டையைக் கட்டுவதற்கு கோட்டைக்கு அயலில் உள்ள தீவுகளிலும், கடலிலிருந்து கொண்டுவரப்பட்ட கோறல் கற்கள் பயன்படுத்தியதை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் கோறல் கற்களுடன் எந்தவித அளவுப் பிரமாணமும் இன்றி ஏற்கனவே பிற கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கருங்கல் மற்றும் சுண்ணாம் புக் கற்றூண்கள் பரவலாகப் பயன்படுத்தப்

பட்டதைக் காண முடிகின்றது. இக்கற்கள் இந்து ஆலயங்களுக்குரியவை என்பதை அக்கற்களின் வடிவமைப்புக்களும் அவற்றில் செதுக்கப்பட்டுள்ள கலை வடிவங்களும் உறுதி செய்கின்றன. அக்கற்கள் காணப்படும் இடங்களுள் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு ஒல்லாந்தரால் மீளுருவாக்கம் செய்யப்பட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் அழிபாடுகளிடையே கிடைத்த கற்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.



Chola Inscription found at Jaffna Fort







1730 இல் ஒல்லாந்தர் ஆட்சியில் மீளக் கட்டிமுடிக்கப்பட்ட இவ்வாலயத்தின் அமைப்பு சிலுவை போன்ற வடிவத்தில் அமைந்திருந்தது. ஏறத்தாழ 600 அடி சுற்றளவு கொண்ட இவ்வாலயத்தில் 50 அடி அகலமான இரு வாயில்கள் இருந்துள்ளன. வெளியில் சிறிதாக தோற்றமளித்த இவ்வாலயத்தின் உள்ளே மிக அலங்காரமான ஒல்லாந்தர் கால கலை மரபின் அமைந்த போதனை மண்டபமும், கலையரங்கும் இருந்ததாகக்

கூறப்படுகின்றது. இங்கு ஒல்லாந்தர் கால தேவாலய மணியோடு போர்த்தக்கேய மணியும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் இவ்வாலயத்தில் பல்வேறு காலகட்டத்திற்குரிய கல்லறைகளும் போர்த்தக்கேய கல்லறைகளும், போர்த்தக்கேய ஒல்லாந்து, ஆங்கிலேய கால போர் வீரர்கள்,உயர் அதிகாரிகள் என்போருக்காக எழுப்பப்பட்ட நினைவுக் கற்களும், சாசனங்களும் கண்டபிடிக்கப்பட்டுள்ளன. இவ் ஆதாரங்கள் போர்த்துக்கேயர் கட்டிய கத்தோலிக்க தேவாலயத்தையே பின்னர் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றினர் என்பதை உறுதி செய்கின்றன. ஆயினும் தற்போது இவ்வாலயத்தின் முழுமையான அமைப்பையே அல்லது அவற்றின் தொழில்நுட்பக் கலை மரபினையோ தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவ்வாலயம் முற்றாக அழிவுண்டு கல் மேடாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாலய அழிபாடுகளிடையே கிடைத்த சான்றுகளைக் கொண்டு முருகைக் கல், செங்கட்டி, சுதை என்பவற்றைப் பயன்படுத்தி இவ் வாலயத்தைக் கட்டியுள்ளனர் என்பது தெரிகின்றது. ஆயினும் இவ்வாலயக் கட்டிடக் கலை மரபுக்கு பொருந்தாத வகையில் சில கருங்கற் தூண்களும், சுண்ணாம்புக் கற்றூண்களும் இங்கு காணப்படுகின்றன. இவை அழிவடைந்த ஆலயத்தின் மேற்படையில் கண்டுபிடிக்கப் பட்டவையாகும். இவ்வழிபாடு முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப் படுமானால் மேலும் பல கற்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இங்கு கிடைத்த கற்களில் கருங்கல் மற்றும் முருகை கற்றூண்கள் சிறப்பாக குறிப்பிடத் தக்கதாகும். அதில் இரு கருங்கற்றூண்களும் இந்து ஆலயத்தின் கற்பக்கிருகம் அல்லது முன் மண்டபத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம். சற்சதுர வடிவில் நன்கு பொழிந்து வெட்டப்பட்ட தூண்களின் நடுப் பாகத்தில் “தாமரைப்பூ” வடிவம் அழகாக செதுக்கப்பட்டுள்ளது. ஒரு கருங்கற்றூணின் மேற்பாகத்தில் காணப்படும் தாமரை வடிவம் திராவிடக் கலை மரபிற்குரிய போதிகை வடிவமாகக் காணப்படுகின்றது. மற்றைய தூண் சுண்ணக் கல்லால் ஆனது. ஏறத்தாழ ஐந்து அடி நீளமும் 1 ½ அகலமும் கொண்ட இத்தூண் பலகை போன்ற வடிவில் நன்கு பொழியப்பட்டுள்ளது. இத்தூண் ஆலய முகப்பின் வாசல்படியின் அல்லது கபோதத்திற்கு மேல் வைக்கப்பட்ட கற்பலகையாக இருக்கலாம்.

ஆலயங்களுக்குரிய கற்கள் பயன்படுத்திய இன்னொரு இடம் மீள்புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட கோட்டையின் வாசல் பகுதியாகும். சுரங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ள நீண்ட பாதையின் கூரை கோரல் கற்களைப் பயன்படுத்தி பிறை வடிவில் கட்டப்பட்ட போதும் அதன் கீழ்த்தள வாசற் பகுதி ஆலயங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கருங்கல் மற்றும் சுண்ணாம்பு கற்றூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நூற்றூக்கு மேற்பட்ட இத்தூண்களின் அளவு,வடிவமைப்பு, அலங்காரம் என்பவற்றின் ஒழுங்கற்ற தன்மைகள் இக்கற்கள் கோட்டை கட்டப் படுவதற்கு முன்னர் வேறுபட்ட கலை மரபுகளில் ஆலயங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டவை என்பதை நன்கு உறுதிப்படுத்துகின்றன.

கோட்டையின் மேல் தளத்திலுள்ள பீரங்கித் தளங்களின் சுவர்கள் குறிப்பிட்ட அளவுகளில் வடிவமைக்கப்பட்ட கோறல் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. ஆயினும் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இடங்களை அமைப்பதற்கு ஆலயங்களுக்குரிய வைரமான தூண்களும் பிற கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.இப்பீரங்கித் தளங்களில் பீரங்கிகள் பொருத்துவதற்கு அமைக்கப்பட்ட வாசல் பகுதிகள் மீள் கட்டுமானத்திற்காக அகழப்பட்ட போது அதன் கீழ்ப் பகுதிகளிலும் மேல் பகுதிகளிலும் கோறல் கற்களோடு சுண்ணக்கல் மற்றும் கருங்கல் தூண்களும் பயன்படுத்திக் கட்டப்பட்டதற்கான ஆதாரங்களை காண முடிந்தது. அவற்றில் இரு சுண்ணக் கற்றூண்கள் நடுவில் சற்சதுரமாக வெட்டப்பட்டு ஒரு பக்கத்தில் ஒரு துவாரமும் மறு பக்கத்தில் இரு துவாரமும் இடப்பட்டு இருபக்க நுனிப்பாகங்களும் அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அலங்காரமாகச் செதுக்கப்பட்ட இத்தூண்களில் காணப்படும் துவாரங்கள் இரு தூண்களை ஒன்றாகப்பொருத்தி முன்னர் வேறொரு கட்டடத்திற்கு பயன்படுத்தப்பட்ட தூண்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் சுடுதளங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சுண்ணக்கற்கள் வளைவாக வெட்டப்பட்டு அவை பிற கற்களுடன் பொருத்திக் கட்டும் வகையில் அவற்றின் உட் பாகம் மூன்று படிகள் கொண்டதாகச் செதுக்கப் பட்டுள்ளது. ஆலயத்திற்கு பயன்படுத்தப்பட்ட இக்கற்கள் தூணின் மேற்புறத்தில் பலகைக்கு மிண்டு போல் அமைந்துள்ள வளைவான

கொடுங்கையாக இருக்கலாம். இச்சுடு தளங்களில் சற்சதுர வடிவில் நடுவில் பள்ளமாக அமைந்த கருங்கற் பலகைகள் பல காணப் படுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய கருங்கல்லின் நடுப்பகுதியில் பள்ள மிடப்பட்ட கருங்கல் ஒன்று கிடைத்துள்ளது. இக்கல் கர்ப்பக்கிரகத்தில் இருந்த ஆவுடையாக அல்லது தெய்வச் சிலை வைக்கப் பயன்படுத்திய பீடமாக எடுத்துக்கொள்ள இடமுண்டு.

மேற்கூறப்பட்ட கற்களும் கற்தூண்களும் இந்து ஆலயங்களுக்குரியவை என்பதில் ஐயமில்லை. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததால் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதங்களை முன்னிலைப்படுத்திய அந்நியர் ஆட்சியில் கோட்டைக்குள் இந்து ஆலயங்கள் கட்டியிருக்க வாய்ப்பில்லை. இதனால் இவ்வாலயக் கற்கள் 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களுக்குரிய கற்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவ்வாலயங்கள் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் கோட்டை இருந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தவையா அல்லது கோட்டைக்கு வெளியே கட்டப்பட்டிருந்தவையா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

16ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் மேலாதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயரும் பின் வந்த ஒல்லாந்தரும் தமது கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதங்களைப் பரப்புவதற்காக சுதேச மதங்களுக்கு எதிரான கலை அழிவுக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதனால் இந்து ஆலயங்கள் மட்டுமன்றி அவர்களின் இருப்பிடங்களும் அழிக்கப் பட்டன. போர்த்துக்கேயர் தமது ஆட்சியில் யாழ்ப்பாணத்திலிருந்த சிறிதும் பெரிதுமான 500 மேற்பட்ட இந்து ஆலயங்களை அழித்ததற்கு தமது நூலில் குறிப்பிட்டுள்ளனர். 1619 இல் நல்லூரை வெற்றி கொண்ட போர்த்துக்கேயப்படை வீரர்கள் அங்கிருந்த பெரிய ஆலயத்தை தமது பாதுகாப்பு மையமாகவும், நிர்வாக மையமாகவும் பயன்படுத்திவிட்டு பின்னர் அவ்வாலயங்களை அழித்ததாகவும் கூறியுள்ளனர். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயக் கற்களைப் பயன்படுத்தியே கிறிஸ்தவ ஆலயங் களையும், கோட்டைகளையும் கட்டியதாகத் தெரிகின்றது. இதனால் யாழ்ப்பாணக் கோட்டையில் காணப்படும் கற்களை யாழ்ப்பாண அரசு காலத்திலிருந்த இந்து ஆலயங்களுக்குரிய கற்களாகக் கருதமுடியும். ஆயினும் தற்போது கோட்டையில் கிடைத்து வரும் ஆதாரங்கள்

கிறிஸ்தவ சகாப்த காலத்திலிருந்து இவ்விடம் குடியிருப்புமையமாகவும், வணிக நகரமாகவும் இருந்துள்ளதை உறுதிசெய்துள்ளதால் இப் பிரதேசத்திலும் போர்த்துக் கேயர் வருகைக்கு முன்னர் இந்து ஆலயங்கள் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. இதை எதிர்கால ஆய்வுகளே உறுதி செய்யவேண்டும்.

### யாழ்ப்பாணக்கோட்டை தோன்றிய வரலாற்றுப் பின்னணி

தற்காலத்தில் கீழைத்தேய நாடுகளிலுள்ள பெரும்பாலான கோட்டைகள் கி.பி 16 ஆம் நூற்றாண்டிலிருந்து வர்த்தக நோக்கோடு வந்த போர்த் துக்கேயர், பின்வந்த ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட வையாகும். ஆனால் உலகில் நாகரிக உருவாக்கம் நிகழ்ந்த காலத் திலிருந்து ஆட்சியாளரையும், அரச வம்சத்தையும் பாதுகாக்கும் நோக்கில் பல அளவுகளிலும், பல வடிவங்களிலும் கோட்டைகள் கட்டப் பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இவற்றைக் குறிக்கும் பெயர்கள் அந்தந்த நாடுகளின் மொழி வழக்கிற்கு ஏற்ப பல பெயர் கொண்டு அழைக் கப்பட்டன. தென்னாசியாவில் தொடக்க கால கோட்டைகள் சிந்துவெளி நாகரிகத்திலும்,வேதகால நாகரிகத்திலும் இருந்ததற்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் உண்டு. தமிழகத்தில் சங்க காலம் தொட்டு கோட் டைகள் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது. சோழர் ஆட்சியில் அரசர்கள் கட்டிட ஆலயங் களையே அவர்களின் அரண்மனையாகவும், பாதுகாப்பு அரணாகவும், கோட்டையாகவும் பயன்படுத்தியதைத் தொல்லியல் ஆய்வுகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தமிழில் கோட்டை என்ற சொல்லுக்கு மதிலரண், காடு, பரிவேடம், வீட்டின் உட்புறம் எனப் பொருள் காணப்படுகின்றது. யாழ்ப்பாணப் பேரகராதியில் கோட்டைப் போர் என்பதற்கு வைக்கற் போர் எனப் பொருள் காணப்படுகின்றது. தற்காலத்தில் இலங்கையிலுள்ள கோட்டைகளில் பெரும்பாலானவை போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு பின்னர் அவை ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் கலை மரபில் மாற்றி வடிவமைக் கப்பட்டு பிரித்தானியர் ஆட்சியில் சிறிய மாற்றங்களுக்குள்ளாகின. இக்கோட்டைகள் தென்னிலங்கையில் கொழும்பு, காலி, மாத்தறை, கற்பிட்டி முதலான இடங்களிலும், வட இலங்கையில் யாழ்ப்பாணம்,

மன்னார், பூநகரி, இயக்கச்சி, ஆனையிறவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன. போர்த்துக் கேயர் ஆட்சியி லிருந்து இக்கோட்டைகள் மிகப் பெரிய அரண்கள், அகழிகள், பீரங்கித் தளங்கள் கொண்டு அமைக்கப்பட்டாலும் கி.மு 3ஆம் நூற்றாண்டிலி ருந்தே மிகச் சிறிய அளவிலான கோட்டைகள் இலங் கையில் பயன்பாட்டி லிருந்ததற்கான ஆதாரங்கள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

கி.மு 2ஆம் நூற்றாண்டில் எல்லாள மன்னனுக்கும் துட்டகாமினிக்கு மிடையே நடந்த போராட்டத்தில் அநுராதபுரத்திற்கு தெற்கே இருந்த கோட்டை பற்றி மகாவம்சம் கூறுகின்றது. இதன் சமகாலத்தைச் சேர்ந்த கிழக்கிலங்கை பிராமிச் சாசனம் ஒன்றில் கொடவேள் என்ற பெயர் காணப்படுகின்றது. அதைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் “கோட்டை வேள்” எனப் பெயர் கொண்டுள்ளார். இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள 21 பிராமிக் கல்வெட்டுக்களில் வேள் எனும் தமிழ்ப் பெயர் காணப்படுகின்றது. இப்பட்டப்பெயர் சங்ககாலத் தமிழகத்தில் குறு நில அரசர்கள் பயன்படுத்திய “வேள் வேளீர்” என்ற பட்டப் பெயர்களை ஒத்ததாகும். பேராசிரியர் ரோமிலா தாபர் வட மொழியில் “ராஜா ” என்ற பட்டப் பெயர் என்ன பொருளைக் குறித்ததோ அதே பொருளை தமிழில் “வேள்” என்ற பட்டப் பெயர் குறித்ததாகக் கூறுகின்றார். மகாவம்சத்திலும் வேள் நாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இதனால் கிழக்கிலங்கைப் பிராமிச் சாசனத்தில் வரும் “கோட்டை வேள்” என்பது வேள் என்ற பட்டத்திற்குரியவனின் கோட்டையாகக் கருத இடமுண்டு.

மேலும் பொலநறுவை அரசு காலத்திலிருந்து கோட்டைகள் பற்றிய செய்திகள் பாளி, சிங்கள இலக்கியங்களில் காணப்படுகின்றன. 11 ஆம் நூற்றாண்டில் 1ஆம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் பௌத்த மதத்திற்கு பாதுகாப்பளித்த சோழர்கால வேளைக்காரப் படையினர் நிலைகொண்டிருந்த இடங்களாக வட இலங்கையில் மாதோட்ட, மட்டிகாவாட்ட தீர்த்த ஆகிய இடங்கள் சூளவம்சத்தில் குறிப்பிடப்படு கின்றது. அதில் மாதோட்ட என்ற இடம் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதோட்டம் என்ற இடத்தை குறிக்கின்றது. மட்டிகாவட்ட தீர்த்த என்ற இடம் அடையாளம் காணப்படாது இருந்தாலும் இவ்விடம் பூநகரியிலுள்ள

மட்டுவில் நாடாக இருக்கலாம். இதைப் பொருத்தமென முடிவாக எடுத்துக் கொள்ளும் பேராசிரியர் பொ. இரகுபதி பாளி இலக்கியம் கூறும் மட்டிகாவத்த என்பதை களிமண்ணால் வட்டமாக (மட்டி, களி மண், வட்ட, வட்டம்) அமைக்கப்பட்ட கோட்டை எனப் பொருள் கொள்கின்றார். பொலநறுவை இராசதானி வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள இராசதானி தெற்கு நோக்கி தம்பதெனியா, யாப்பகூவா, குருநாகல், கோட்டை ஆகிய இடங்களுக்கு இடம் மாறிய போது அங்கெல்லாம் அரசின் பாதுகாப்பு கருதிக் கோட்டைகள் அமைக்கப்பட்டதை பாளி, சிங்கள இலக்கியங்கள் உறுதிசெய்கின்றன. இந்நிலையில் சிங்கள இராசதானிகள் தென்னிலங்கையில் தோன்றிய போது வட இலங்கையில் கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தமிழர் சார்பான அரசு தோன்றியது. சூளவம்சம், இராஜாவலிய முதலான பாளி, சிங்கள இலக்கியங்கள் அவ்வரசின் படை வீரர்கள் நிலைகொண்டிருந்த இடங்களர்க மன்னார் பட்டினம், மாதோட்டம், கோண, பதி மாவட்டங்கள், புலைச்சேரி, வலிகாமம், ஊர் காவற்றுறை முதலான இடங்களைக் குறிப்பிடுகின்றன. இவ்விடங்கள் சில சமகாலத்திலும் பிற்காலத்திலும் துறைமுகங்கள், கோட்டைகள் இருந்த இடங்களாகக் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக இரண்டாம் இராசாதிராச சோழனது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவராயன் பேட்டை மற்றும் திருவாலங்காட்டு கல்வெட்டுக்கள் வட இலங்கை மீது படையெடுத்த சோழப்படை வீரர்கள் மட்டிவாள், ஊராத்தோட்டை, வலிகாமம், மாதோட்டம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்த படை வீரர்களையும், யானைகளையும் சிறைப்பிடித்து தமிழ்நாட்டுக்கு கொண்டு சென்றதாகக் கூறுவதைக் குறிப்பிடலாம். இவற்றுள் ஊர்காவற்றுறை, மாதோட்டம் ஆகிய இடங்களில் போர்த்துக் கேயர் கட்டிய கோட்டைகள் உள்ளன. மட்டிவாள் என்ற இடம் தற்போது பூநகரியிலுள்ள மட்டுவில் நாட்டைக் குறிப்பிடுகின்றது. இவ்விடத்தில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரால் மீளமாற்றி அமைக்கப்பட்ட பூநகரிக் கோட்டை அமைந்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

ஆகவே தற்போதைய யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாணத்தில் அந்நியர் ஆதிக்கம் நிலவியதன் அடையாளமாக இருப்பினும் இவ் விடத்தில் கோட்டை கட்டுவதற்கு பொருத்தமான இடமாக போர்த்துக் கேயர் தெரிவு செய்தமைக்கு அவ்விடத்தின் பாரம்பரிய வரலாற்றுப்

பின்னணியும் அவர்கள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது இவ்விடம் யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்ததையும் முக்கிய காரணங்கள் என்பதில் சந்தேகமில்லை பண்டு தொண்டு கடல் சார் வாணிபத்தில் முக்கிய கேந்திர மையமாக விளங்கிய இவ்விடம் யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கத்திற்கு வருவதற்கு முன்னர் சோழர் ஆட்சில் அவர்களின் வணிக மையமாகவும் பாதுகாப்பு தளமாகவும் இருந்திருக்கலாம் என்பதை அங்கு கிடைத்து வரும் தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன. இலங்கையில் உள்ள புராதன இந்து ஆலயங்கள் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் சோழர் கால ஆலயங்களில் கருங்கற்களைப் பயன்படுத்திய போது யாழ்ப்பாண அரசு சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்தியே ஆலயங்களை அமைத்ததாகக் கூறுகின்றார். யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருவகை கற்களையும் பயன்படுத்தி கட்டப்படுவதற்கான அழிபாடுகள் பரந்தளவில் காணப் படுகின்றன. 1980களில் கோட்டை வாசல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு இங்கிருந்த ஆலயம் ஒன்றுக்கு இராஜேந்திர சோழ மன்னன் தானம் வழங்கிய செய்தியைக் கூறுகின்றது. கோட்டை அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்ட கருங்கல்லால் கட்டப்பட்ட இந்து ஆலயங்களின் அடிபாடுகளின் கலை மரபு சோழர் கலை மரபைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. கோட்டையின் பழைய பெயரான ஐநூற்றுவன் வளவு இலங்கையில் சுயாட்சி கொண்ட நகரங்களை உருவாக்கிய சோழர்கால ஐநூற்றுவன் என்ற வணிககணத்தினை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவ்வாதா ரங்களை வைத்து நோக்கும் போது சோழர் காலத்தில் கோட்டைப் பிரதேசம் முக்கிய துறைமுக நகராக வளர்ச்சியடைந்ததைக் காட்டு கின்றது. இப்பின்னணியில் நோக்கும் போது கோட்டையில் கிடைத்து வரும் கருங்கல்லாலான ஆலய அழிபாடுகளைச் சோழர் காலத்தில் இங்கிருந்த ஆலயங்களாகக் கொள்வது பொருத்தமாகவிருக்கலாம்.

யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த ஆதாரங்களில் கணிசமானவை யாழ்ப்பாண அரச காலத்திற்குரியவை. இங்கு கிடைத்த நாணயங்களில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சுண்ணக்கல்லாலான ஆலய அழிபாடுகள் யாழ்ப்பாண அரசு காலத்தில் கட்டப்பட்டவையாக கருத இடமுண்டு. யாழ்ப்பாண அரச காலம் தொடர்பாக தோன்றிய

யாழ்ப்பாண வைபவமாலை போன்ற தமிழ் இலக்கியங்களில் யாழ்ப்பாண அரசகாலக் கோட்டை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண அரசின் மீதான செண்பகபெருமாள் படையெடுப்பு பற்றிக் கூறும் கோகிலசந்தேஸய என்ற சிங்கள இலக்கியம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த காவலரண்கள், கோட்டைகள் பற்றிக் கூறுகின்றது. தென்னிலங்கையில் கொட்டகம என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண மன்னன் வெளியிட்ட கல்வெட்டில் பொங்கொழில் சிங்கை நகர் என்ற குறிப்பு காணப்படுகிறது. இதிலிருந்து கடற்கரை சார்ந்த இடத்தில் யாழ்ப்பாண அரசின் முக்கிய நிர்வாக மையம் இருந்துள்ளமை தெரிகின் றது. கடல் வழியாக யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த போர்த்துக் கேயர் யாழ்ப்பாண அரச படைகளுடன் போரிட்ட இடங்களில் தற்போதைய கோட்டை அமைந்துள்ள பண்ணைத்துறை முக்கிய இடமாகக் குறிப்பிடப் படுகிறது. நல்லூரை யாழ்ப்பாண அரசின் தலைநகராக போர்த்துக்கேய ஆவணங்கள் குறிப்பிட்டாலும் அவர்களின் அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் பண்ணைத் துறைமுகத்தை மையப்படுத்தியே நடந்த தாகக் கூறுகின்றது. பண்ணை என்ற சொல்லுக்கு மரக்கலன்கள், பண்டங்கள், களஞ்சியப்படுத்தும் இடங்கள் எனும் பதங்கள் உள்ளன. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்த போது கோட்டை அமைந்த பிரதேசம் பண்ணைத் துறை என அழைக்கப்பட்டிருப்பது கோட்டைக்கும் யாழ்ப்பாண அரசிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததைக் காட்டுகின்றது. இதனால் யாழ்ப்பாண அரசு காலத்தில் களிமண், மரம் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கோட்டையையே போர்த்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் கற்களைப் பயன்படுத்தி தமது நாடுகளின் கலைமரபுகளில் கட்டப்பட்டவை எனக் கூறலாம். இதைக் கோட்டையில் மேற்கொள்ளப் பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகள் எதிர்காலத்தில் மேலும் உறுதி செய்யலாம்.

## உசாத்துணைகள்


இந்திரபாலா,கா., 1972,யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்,கண்டி.

பத்மநாதன்,சி., 2004,ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

Abayasinge, T,.1966, Portuguese Rule in Ceylon 1594- 1612, Colombo.

Codrington, H.W. 1924, Coins and Currency, Memoirs of the Colombo Museum, Series A, No.3, Colombo.

Conigham,Robin.,2002, "Beyond and Before the Imperial Frontiers: ERLY Histoic Sri Lanka and the Origins of Indian Ocean Trade" Man and Environment, Journal of the Indian Society for Prehistoric and Quaternary Studies;Vol.XXVII,No.1:99-107.

Culavamsa, 1953, Geiger. W. [E.d], Ceylon Government Information Department, Colombo.

Davis,C.E., Coningham, R.A.E., Gunawardhana, Pushparatnam, PSchmit, A,A. &Manuel,M.J. (2019) The Antiquity of Jaffna Fort: New Evidence from post-disaster archaeological investigations in Northern Sri Lanka.Antiquity 93(368): e13.

Mahavamsa, 1950, (e.d) Geiger, W., The Ceylon Government Information Department, Colombo.

Paranavitana, S., 1970, Inscription of Ceylon: Early Brahmi Inscrip¬tions, The Department of Archaeology Ceylon, Colombo,I.

Pushparatnam, P., 2010, "Hindu Ruins Found in Jaffna Fort" in VaralāṟṟuUlā, (ed) Nadaraja R.,C. Published by CivattamiḷMāṇiṭaviyalKaḷakam, Jaffna.

Pushparatnam, P., 2014, commercial Ties Between Northern Sri Lanka and Foreign Countries up to 13th Century AD" in National Archaeological Symposium, Department of Archaeology, Colombo

Pushparatnam, P., 2014, "Jaffna-Multi Lateral Views", in Essay on History Culture and Foreign Relations: Festschrift for Professor S.Pathmanathan [eds], MahindaSomathilake and Wimalasena,, Colombo.

Pushparatnam, P.,2014, Tourism and Archaeological Heritage Monuments in Northern Sri Lanka, Colombo.

Pushparatnam, P., 2017, "Nallur- The Capital of Jaffna Kingdom" in Commemoration Volume in Honour of Rev. Prof. Hanguranketha Dheerananda : 373- 387

Ragupathy, P., 1987, Early Settlements in Jaffna: An Archaeological Survey, Mrs.Thillimalar Ragupathy, and Madras.

Rasanayagam, C., 1926, Ancient Jaffna, A.S., Everyman's Publishers Ltd, Madras.

Queroz,FrFernaode, 1930, The Temporal and Spiritual Conquest of Ceylon, Fr. S.G. Perera, Colombo.

Sitrampalam, S.K., 1990, Proto Historic Sri Lanka: An Inter¬disciplinary Perspective in Journal of the Institute of Asian Studies, VIII [1]: 1-8.